உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No. 303/2021

பெயர் :ரா.வீரணன்(அ.சா.6)

தகப்பனார் பெயர் :ராமசாமி

கணவர் பெயர் :

வயது :73

கிராமம் :அரிட்டாபட்டி

வட்டம் :மேலூர்

தொழில் :நரசிங்கம் கிராமத்தில் வாட்ச்மேன்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

23.07.2025

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியவில்லை. என்ன காரணத்திற்காக இன்று நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்று எனக்கு தெரியவில்லை. நான் கையெழுத்து செய்வேன். சாட்சியிடம் 1வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து காட்டப்பட்டு அதில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதானா என்று கூறமுடியாது என்று சாட்சி குறிப்பிடுகிறார். கைப்பற்றுதல் அத்தாட்சி சாட்சியிடம் காட்டப்பட்டு, அதில் உள்ள 2வது கையெழுத்து தன்னுடையது அல்ல என்று மறுக்கிறார்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி :

கடந்த 09.08.2019ம் தேதி காலை 11.00 மணியளவில் நானும், நாடார் தோப்பை சேர்ந்த பிரபு ஆகிய நாங்கள் இருவரும் சென்றபோது, TN67C3890 என்ற ஆம்னி வேன் எதிரி பாண்டிக்கண்ணன் ஓட்டிவந்து, அதில் கவிராஜா மற்றும் கார்த்திக்ராஜா, மகேஸ்வரன் ஆகிய எதிரிகள் வண்டி கவிழ்ந்தது

போல் படுத்திருந்து அதன்பிறகு அங்கு நின்று கொண்டிருந்த ஆம்னி வேன் சாய்ந்திருந்ததை பார்வையிடுவதற்காக சென்றபோது, ஆஜர் எதிரிகள் 3 பேரும் முன்னுக்கு பின் முரணாக பேசவும், அதில் மகேஸ்வரன் என்ற 1வது எதிரி தானாக முன்வந்து மேலூர் காவல்நிலைய குற்ற எண்.262/2019, மற்றொரு குற்ற எண்.472/2019 ஆகிய வழக்கில் சம்பந்தப்பட்டதாகவும், அதில் மகேஸ்வரன் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் பிரபுவும் கையெழுத்து செய்துவிட்டு TN67C3890 என்ற ஆம்னிவேனையும் தன் கையில் இருந்து எடுத்து கொடுத்த ரூபாய் 2000 :ரூபாயையும் கைப்பற்றி அதில் தயாரித்துள்ள கைப்பற்றுதல் அத்தாட்சியில் நானும் பிரபுவும் கையெழுத்துவிட்டு, போலிசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகளுடன் சமாதானமாகி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எ.த.கு.வி :இல்லை.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.07.23 07:25:56 +0530

Assistant Sessions Judge

Melur